[பேரவைத் தலைவர்] [1981 ஜனவரி 24

நான் எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கேள்வி கேட்க வாய்ப்பில்லாதவர்களுக்கு இப்போது வாய்ப்பளிக்க வேண்டியிருக்கிறது. எனவே தயவு செய்து வயது முதிர்ந்த உறுப்பினர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

4. தகவல் கோரல

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. ப. பொன்னுரங்கம் : நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைமீதான விவாதத்தின் போது பலவற்றையும் எடுத்துப்பேச வாய்ப்பு உள்ளது ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது சில முக்கியமான தீர்மானங்களாக இருந்தாலன்றி எடுத்துக்கொள்வது மரபு அல்ல. திரு. பொன்னுரங்கம் தயவு செய்து ஒத்துழைக்கவேண்டும்.

[முற்பகல் 10-20]

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற கட்சி சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்ட மன்றத்தைக் கூட்டச் சொன்னால் அமளிதுமளி ஏற்படுத்துவார், என்னிடத்தில் பிரச்னைகளைச் சொல்லலாம், சட்டமன்றத்தைக் கூட்டவேண்டிய அவசியமில்லை, என்றெல்லாம் பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசினார்கள். ஆனால் இன்று மனம் திறந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதற்காக நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு மனம் திறந்து என்னுடைய நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். இந்த அரசினுடைய திட்டங்களைக் கோடிட்டுக் காட்டுவதாக இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆளுநர் உரை அப்படி இருக்கிறதா என்று கேட்டால் அமாவாசையில் வெண்ணிலவு இல்லாமலிருப்பது போல், அத்தி மரம் பூக்காதிருப்பது போல், ஆடிக்காற்றில் தென்றல் சுகம் இல்லாதது போல் இந்த ஆளுநர் உரை கொள்கைகள் இல்லாத, திட்டங்கள் இல்லாத உரையாகத்தான் இருக்கிறது என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.